CNR.No. TNKK- 1400-0549-2019

**நீதித்துறை நடுவர் விரைவு நீதிமன்றம், இரணியல்**
**முன்னிலை திரு.T.நரேந்திரகுமார், B.A., LLM.,PGDFL.,**
நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம்
**2026** ஆம் ஆண்டு **ஆகஸ்ட்** மாதம் **11**ஆம் நாள் **செவ்வாய்கிழமை**
**ஆண்டுப்பட்டியல் வழக்கு எண்.232/2019**

**CASE SUMMARY**

| Statement as per Rule 106 of the Criminal Rules of Practice, 2019 | | | |
|---|---|---|---|
| 1 | Case Number | | Calendar Case (CC) No.232 of 2019 |
| 2 | Name of the Police Station and Crime Number | | State of Tamilnadu,<br>Represented by its<br>Inspector of Police,<br>Colachel Police Station,<br>Colachel. (Cr.No. 251/2013).<br>…..Complainant |
| 3 | Name of the Accused person | Description of the Accused | Denniskanth |
| 4 | Father's/Husband's Name | | son of Rajendiran |
| 5 | Occupation | | -- |
| 6 | Residence of the Accused | | Chakothara Street, Chettikulam |
| 7 | Age and Gender | | 24/2013, Male |
| 8 | Date of Occurrence | Date of | 27.06.2013 |
| 9 | Date of Information to the Police | | 27.06.2013 |
| 10 | Apprehension | | 27.06.2013 |
| 11 | Release on Bail | | 01.07.2013 |
| 12 | Period of remand of the accused | | 27.06.2013 to 01.07.2013 |
| 13 | Filing of complaint/final report in the Court | Date of | 25.08.2014 |
| 14 | Committal of the case to the Court of Sessions | | Nil |
| 15 | Questioning of the accused u/s 281 of Cr.P.C | | 14.03.2016 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 16 | Commencement of Trial (the date on which the documents u/s 207 of the Cr.P.C are furnished to the accused | | 29.11.2022 | | |
| 17 | Examination in Chief and Cross examination of a witness | | Witness | Chief Examination | Cross Examination |
| | | | P.W.1 | 29.11.2022 | 29.11.2022 |
| | | | P.W.2 | 03.08.2026 | -- |
| | | | P.W.3 | 05.08.2026 | 05.08.2026 |
| 18 | Date of examination of the accused under section 313(1)(b) of Cr.P.C | | 11.08.2026 | | |
| 19 | Closure of Trial | | 11.08.2026 | | |
| 20 | Details of abscondence of an accused and his appearance/production, as the case may be | | Warrant | Abscondence | Appearance |
| | | | Non-Bailable Warrant | 09.03.2022 | 27.04.2022 |
| 21 | Grant of stay by superior Courts and results thereof | | Nil | | |
| 22 | Sentence or Order | | முடிவாக, குற்றம் சுமத்தப்பட்ட நபரான **டென்னிஸ்காந்த், த/பெ.ராஜேந்திரன்** என்பவரின் மீதான பிரிவுகள் 51 (b) (i), (ii), (iii) r/w 63 காப்புரிமை சட்டம் 1957 மற்றும் இ.த.ச. பிரிவு 292A கீழான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி **நிரூபணம் செய்யப்படவில்லை** என்பதால் மேற்படி குற்றம் சுமத்தப்பட்ட நபரை இவ்வழக்கின் குற்றச்சாட்டு களிலிருந்து விடுதலை செய்தும், குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் 1973 பிரிவு 248(1)ன் படி வழக்கிலிருந்தும் விடுதலை செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது. செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது. | | |
| 23 | Service of copy of judgment of findings on accused | | Copy of the judgment will be uploaded in CIS and made available for viewing in e-courts services portal. | | |
| 24 | Explanation of delay | | Delay caused due to the delay of service of summons to the Prosecution Side listed | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | witnesses by the Prosecution. | | |
| 25 | Details of victim compensation ordered | | Nil | | |
| 26 | Filing of miscellaneous petitions and their results including the results on challenge before Superior Court | | Petition | Crl.M.P.No. | Result |
| | | | | | |
| | | | | | |

| | |
|---|---|
| தமிழ்நாடு மாநில அரசுக்காக,<br>காவல் ஆய்வாளர்,<br>குளச்சல் காவல் நிலையம்,<br>குற்ற எண்.251/2013 | . ............குற்றமுறையீட்டாளர், |

/எதிர்/

| | |
|---|---|
| டென்னிஸ்காந்த் (வயது 24/2013)<br>த/பெ. ராஜேந்திரன்,<br>சகோதர தெரு,<br>செட்டிக்குளம். | .................. குற்றம் சுமத்தப்பட்ட நபர் |

இவ்வழக்கு நீதித்துறை நடுவர் நீதிமன்றம் இரணியல் நீதிமன்றத்தில் 25.08.2014ஆம் தேதி ஆ.ப.வ.எண். 152/2014 எண்ணாக கோப்பில் எடுக்கப்பட்டு ROC No.141/2019–A dated 18.09.2019ன்படி இந்நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு 17.10.2019ஆம் தேதி இந்நீதிமன்றத்தில் கோப்பில் எடுக்கப்பட்டு இது நாள் வரை இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கு 11.08.2026ம் தேதி இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வரப்பெற்று அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 1 அவர்களும், குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R.சுரேஷ்பாபு அவர்கள் ஆஜராகியும், வாதத்தை கேட்டும் ஆவணங்களை ஆராய்ந்தும் இன்று 11.08.2026 ஆம் தேதி நீதிமன்றம் கு.வி.மு.ச 1973 அத்தியாயம் XXVIIன் கீழ் பிறப்பிக்கும்.....

**<u>தீர்ப்புரை</u>**

குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் 1973 என்பது கு.வி.மு.ச 1973 என்றும் பதிவிடப்படுகின்றது.

**1. அரசுத்தரப்பு வழக்குரையின் சுருக்கம் :-**

கடந்த 27.06.2013ஆம் தேதி 19.30 மணிக்கு குற்றம் சுமத்தப்பட்ட நபர் குளச்சலில் நடத்திவரும் அப்சல் விடியோஸ் கடையில் அரசு அனுமதியும், காப்புரிமம் பெறாமல் புதுபட சிடிக்கள் மற்றும் ஆபாசப்பட சிடிக்கள் மொத்தம் 134 சிடிக்களை விற்பனைக்காக வைத்திருந்து குற்றம் புரிந்ததாகவும், எனவே குற்றம் சுமத்தப்பட்ட நபரின் செய்கையானது பிரிவுகள் 51(b), i, ii, iii r/w 63 காப்புரிமை சட்டம் 1957 (Copy right Act 1957) மற்றும் இ.த.ச. பிரிவு 292A ன் கீழ் தண்டிக்கத்தக்கவர் என்று குவிமுச 1973 பிரிவு 173(2)– ன்படி குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. கு.வி.மு.ச 1973 பிரிவு 207ன் கீழ் வழக்கு ஆவண நகல்கள்:-**

இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குற்றமுறையீட்டு காவல் நிலையத்தார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச 1973 பிரிவு 207ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**3. கு.வி.மு.ச 1973பிரிவு 240(1) ன் கீழ் குற்றச்சாட்டு வனைதல் :-**

வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதின் அடிப்படையில் இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது குற்றம் புரியப்பட்டிருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு ஆதாரம் இருந்ததால் கு.வி.மு.ச 1973பிரிவு 240(1) ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீது பிரிவுகள் 51(b), (i), (ii), (iii) r/w 63 of Copy right Act 1957 மற்றும் இ.த.ச. பிரிவு 292A ன் கீழ் தனித்தனியே குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டது.

**4.** வனையப்பட்ட குற்றச்சாட்டுகளை கு.வி.மு.ச 1973 பிரிவு 240(2) ன் படி தமிழில் எடுத்துக்கூறி விளக்கி வினவப்பட்டது. இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர் பொய்வழக்கு என்றும், குற்றவாளி இல்லை எனக்கூறி குற்றச்சாட்டுக்களை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டினார். எனவே அரசுதரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு கு.வி.மு.ச 1973 பிரிவு 242 ன் கீழ் உத்தரவிடப்பட்டது.

**5. <u>கு.வி.மு.ச 1973 பிரிவு 240ன் கீழ் அரசுத்தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் :-</u>**

அரசுத்தரப்பில் அ.சா.1 டைட்டஸ், அ.சா.2 அஜ்மல் (எ) அப்துல் நாசர், அ.சா.3 செல்வின் ஜோஸ் ஆகியோர்கள் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்களும், அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.11 வரையிலான சான்றுபொருட்களும் குறியீடு செய்யப்பட்டன.

**6. <u>அரசு தரப்பு சாட்சியங்களின் சுருக்கம் :-</u>**

(i) இவ்வழக்கின் அ.சா.1 டைட்டஸ் அவரது சாட்சியத்தில் சம்பவம் பற்றியும், பொருட்களை அத்தாட்சியின்மூலம் கைப்பற்றியது பற்றியும், மேலும் வழக்கு பதிவு செய்வதற்கு உதவியாக இருந்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

(ii) பார்வை மகசர் சாட்சியான அ.சா.2 அஜ்மல் (எ) அப்துல் நாசர் அவரது சாட்சியத்தில் பார்வை மகசரில் உள்ள கையெழுத்து அவருடையது இல்லை என்று சாட்சியமளித்துள்ளார்.

(iii) அ.சா.3 செல்வின்ஜோஸ் காவல் ஆய்வாளர் (கூடுதல் சாட்சி) ஆவணங்களின் அடிப்படையில், புலனாய்வு அதிகாரிக்கு பதிலாக சாட்சியமளித்துள்ளார். அவர் சாட்சியத்தில் புலனாய்வு செய்த காவல் ஆய்வாளர் குருநாதன் அவர்கள் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் கடையை சோதனை செய்து அத்தாட்சி மூலம் பொருட்களை கைப்பற்றி வழக்கு பதிவு செய்ததையும், மேலும் புலனாய்வு செய்து அதன் அடிப்படையில் மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்து, மேலும் சாட்சிகளை விசாரணைசெய்து குற்ற இறுதிஅறிக்கையை இந்நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதையும் குறித்து சாட்சியமளித்துள்ளார்.

**7. <u>கு.வி.மு.ச 1973பிரிவு 313 (1)(b)ன் கீழ் வினவுதல் :-</u>**

அரசுத்தரப்பில் சாட்சியம் அளித்துள்ள சாட்சிகளின் சாட்சியத்தினை தொகுத்து குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு பாதகமாக உள்ள சூழ்நிலைகள் குறித்து குற்றம் சுமத்தப்பட்டநபரிடம் **கு.வி.மு.ச 1973 பிரிவு 313 (1)(b)ன்** கீழ் வினவ குற்றம் சுமத்தப்பட்ட நபர் தன் மீது பொய்சாட்சி. பொய் வழக்கு என்று பதில் அளித்தார்.

**8. குவிமுச 1973 பிரிவு 243–ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் :-**

குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில் சாட்சிய சாண்றாவணம் எதுவும் இல்லை என்று கூறப்பட்டதால் மேற்படி தரப்பு சாட்சி முடிக்கப்பட்டு அதனடிப்படையில் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன.

**9. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயங்கள் :-**

1) இவ்வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது பிரிவுகள் 51 (b) (i), (ii), (iii) r/w 63 காப்புரிமை சட்டம் 1957 மற்றும் இ.த.ச. பிரிவு 292A கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசுத்தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?

2) நிரூபிக்கப்பட்டிருப்பின் குற்றவாளிக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை யாவை?

**10. பிரச்சினைக்கான தீர்வுகள் :–**

இவ்வழக்கில் அரசுதரப்பில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் 27.06.2013ம் தேதி 19.30 மணிக்கு குளச்சலில் உள்ள அப்சல் வீடியோ கடையில் வைத்து எவ்வித அரசு அனுமதியின்றியும், காப்புரிமம் பெறாமலும் புதுப்பட சிடிக்களும், ஆபாச சிடிக்களும் விற்பனை செய்ததை அரசுதரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை பார்க்கும்போது,

**11.** இவ்வழக்கில் சம்பவ சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.1 டைட்டஸ் என்பவரின் சாட்சியத்தின் பரிசீலினையில்27.06.2013ம் தேதியன்று அவரும், குளச்சல் காவல் நிலைய ஆய்வாளர், சிறப்பு உதவி ஆய்வாளர் சந்திரபாபு, தலைமை காவலர் பெலிக்ஸ் ஆகியோர்கள் ரோந்து பணியில் இருந்தபோது குளச்சல் பீச் ரோடு அப்சல் வீடியோ கடையை நடத்தி வரும் டென்னிஸ்காந்த் என்பவர் எந்தவித அரசு அனுமதியின்றி புதுப்பட சிடி மற்றும் ஆபாச சிடிக்கள் விற்பதாக கிடைத்த தகவலின்படி மேற்படி கடையை சோதனை செய்ய காலஅவகாசம் இல்லாததால் சோதனை உரிமைக்கடிதம் தயார் செய்து சிறப்பு உதவி ஆய்வாளர் சுந்தர்ராஜ் அவர்களிடம் கொடுத்து அனுப்பிவிட்டு மேற்படி கடையை சோதனை செய்ய சாட்சியாக பொதுமக்கள் யாரும் முன்வராததால் காவல் ஆய்வாளர் அவர்கள் போலீஸ் பார்ட்டியாகிய அவர்களை சாட்சியாக

வைத்துக்கொண்டு கடையை சோதனை செய்தபோது, 123 புதுப்பட சிடிக்களும், 11 ஆபாச சிடிக்களும் மொத்தம் 134 சிடிக்கள் இருந்தது என்றும், உடனே கடையின் உரிமையாளர் டென்னிஸ் காந்த் என்பவரை கைது செய்து அத்தாட்சி தயார் செய்து அந்த அத்தாட்சியில் போலீஸ் சாட்சிகளாகிய சிறப்பு உதவி ஆய்வாளர் சந்திரபாபு, பெலிக்ஸ் ஆகியோர்களிடம் சாட்சி கையொப்பம் பெற்று எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் குளச்சல் காவல் நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்தது குறித்து சாட்சியமளித்துள்ளார்.

**12.** ஆனால் அ.சா.1ன் குறுக்கு விசாரணையில் கைப்பற்றப்பட்ட சிடிக்களை ஆய்வாளரோ அல்லது உடனிருந்த சாட்சிகளோ போட்டு பார்க்கவில்லை எனவும், எந்தெந்த திரைபடத்தின் எத்தனை சிடிக்கள் கைபற்றப்பட்டது என்பது குறித்து தெரியாது எனவும் சாட்சியமளித்துள்ளது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. எனவே அரசுதரப்பில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சிடிகளில் என்ன பதிவேடுகள் இருந்தது என்பது குறித்து அ.சா.1க்கு தெரியாது என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

**13.** அரசுதரப்பில் தலைமை காவலர் பெலிக்ஸ் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் சந்திரபாபு ஆகியோர்கள் முன்னிலையில், சிடிக்களை அத்தாட்சியின் மூலம் கைப்பற்றியதாக குறிப்பிட்ட நிலையில், அது குறித்து அ.சா.1ம் சாட்சியத்தில் கூறிய நிலையில், மேற்படி இரு சாட்சிகளான பெலிக்ஸ் மற்றும் சந்திரபாபு ஆகியோர்களை அரசுதரப்பில் முன்னிறுத்தப்படவில்லை என்பது தெரியவருகிறது. எனவே அரசு தரப்பில் குற்றம் சுமத்தப்பட்ட நபரிடமிருந்து புதுப்பட சிடிகளும், ஆபாச சிடிகளும் கைப்பற்றியது குறித்து இந்நீதிமன்றத்தில் சாட்சிகள் மூலம் முன்னிறுத்தப்படவில்லை என்பது தெரியவருகிறது.

**14.** மேலும் பார்வை மகசர் சாட்சியான அ.சா.2 அஜ்மல் (எ) அப்துல்நாசர் என்பவரின் சாட்சியத்தின் பரிசீலினையில், பார்வை மகசரில் உள்ள கையொப்பம் அவருடையது இல்லை என்றும், வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார். எனவே அவரது

சாட்சியத்திலிருந்து சம்பவ இடம் குறித்து எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

**15.** மேலும் மற்றொரு சாட்சியான பட்டியல் சாட்சி அகமது என்பவர் தற்போது அவர் புகார்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் இல்லை என்பதால் கிராம நிர்வாக அலுவலரிடம் சான்று பெற்று அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, அவரை அரசு தரப்பில் தளர்வு செய்யப்பட்டுள்ளது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

**16.** இவ்வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் கடையை சோதனை செய்து அதிலிருந்த புதுப்பட சிடிகள் மற்றும் ஆபாச சிடிகள் கைபற்றியதை குறித்து அ.சா.1 டைட்டஸ் சாட்சியமளித்துள்ள நிலையில், ஆனால் கைப்பற்றப்பட்ட சிடிக்களில் என்ன பதிவேடுகள் இருந்தது என்பது குறித்து பார்வையிடவில்லை என சாட்சியமளித்துள்ளார். எனவே அ.சா.1க்கு கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சிடிகளில் என்ன பதிவேடுகள் இருந்தது என்பது குறித்து அ.சா.1க்கு தெரியாது என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

**17.** மேலும் வேறு தனிப்பட்ட நபர்கள் எவரும் சோதனையின் போது சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்பதும், மேலும் குற்றம் சுமத்தப்பட்ட நபரிடமிருந்து எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தையும் பெறவில்லை என்பதும் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும் அ.சா.1 சிறப்பு உதவிஆய்வாளரை தவிர்த்து மற்ற தனிப்பட்ட சாட்சிகள் யாரும் அரசு தரப்பில் முன்னிறுத்தப்படாத நிலையிலும், மேலும் இவ்வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபரிடமிருந்து புதுப்பட சிடிகள் மற்றும் ஆபாச சிடிகள் கைப்பற்றியது குறித்து இந்நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்படாத நிலையிலும், அது அரசுதரப்பு வழக்கில் சந்தேகம் எழுவதாக இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

**18.** மேலும் அரசுத்தரப்பில் கூறியுள்ளது போல் மேற்படி குற்றம் சுமத்தப்பட்ட நபர் தான் புதுப்பட சிடிகள் மற்றும் ஆபாச சிடிகளை அவரது கடையில் வைத்து விற்பனை செய்தார் என்பதற்கான தகுந்த சாட்சிய சான்றாவணங்களை அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி

முழுமையாக ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு சமர்ப்பிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

**19.** மேலும் மேற்கூறிய குற்றபிரிவின் கீழ் எந்தவொரு சங்கதிகளும் அரசுத்தரப்பில் சமர்பிக்கவில்லை என்பதை கருத்தில் கொள்கிறது. மேலும் சந்தேகத்தின் பலனை குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு வழங்குவதே நீதியின்பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**20.** எனவே இந்நீதிமன்றம் மேற்கூறிய கருத்தில் கொண்ட விஷயங்களை வைத்தும் சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையில், இந்நீதிமன்றம் அரசுத்தரப்பில் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீதான பிரிவுகள் 51 (b) (i), (ii), (iii) r/w 63 காப்புரிமை சட்டம் 1957 மற்றும் இ.த.ச. பிரிவு 292A கீழான குற்றச்சாட்டுகளை மெய்பிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**21.** <u>**தீர்வு :-**</u>

முடிவாக, குற்றம் சுமத்தப்பட்ட நபரான **டென்னிஸ்காந்த், த/பெ.ராஜேந்திரன்** என்பவரின் மீதான பிரிவுகள் 51 (b) (i), (ii), (iii) r/w 63 காப்புரிமை சட்டம் 1957 மற்றும் இ.த.ச. பிரிவு 292A கீழான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி **நிரூபணம் செய்யப்படவில்லை** என்பதால் மேற்படி குற்றம் சுமத்தப்பட்ட நபரை இவ்வழக்கின் குற்றச்சாட்டு களிலிருந்து விடுதலை செய்தும், குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் 1973 பிரிவு 248(1)ன் படி வழக்கிலிருந்தும் விடுதலை செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

**22.** <u>**கு.வி.முச 1973 பிரிவு 452ன் கீழ் உத்தரவு :-**</u>

இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்ட ஆர்.பி.எண். 17/2021ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.11 வரையிலான 134 புதுப்படம் மற்றும் ஆபாசப்பட சிடிக்களை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு விதிகளுக்குட்பட்டு அழிக்க கு.வி.முச 1973 பிரிவு 452ன்கீழ் உத்தரவிடப்படுகிறது.

**23.** <u>**வழக்கில் கு.வி.மு.ச 1973 பிரிவு 437–A– ன் கீழ் உத்தரவு :-**</u>

வழக்கில் கு.வி.மு.ச1973 பிரிவு 437–A–ன் கீழ் பிணையப்பத்திரம் பெறப்பட்டுள்ளது. மேற்படி பிணையப்பத்திரமானது 6 மாத காலத்திற்கு

நடைமுறையில் இருக்கும் என்றும், பின்னர் அப்பிணையப்பத்திரம் காலாவதியாகி விடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று **(11.08.2026)** திறந்த நீதிமன்றத்தில் அவையறிய தீர்ப்புரை அவையறியப் பகரப்பட்டது.

T NARENDRAKUMAR

Digitally signed by T NARENDRAKUMAR
Date: 2026.08.11 17:31:07 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
இரணியல்.

**பின் இணைப்பு**

**அரசுத்தரப்பு சாட்சிகள் :-**

| | | | | |
|---|---|---|---|---|
| அ.சா.1 | திரு.டைட்டஸ் (சிறப்பு உதவி ஆய்வாளர்) | 29.11.2022 | -- | சம்பவ சாட்சி |
| அ.சா.2 | திரு.அஜ்மல் (எ) அப்துல் நாசர் | 03.08.2026 | -- | பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.3 | திரு.செல்வின் ஜோஸ் (சிறப்பு உதவி ஆய்வாளர்) | 05.08.2025 | அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 | கூடுதல் சாட்சி |

**அரசுத்தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 /அ.சா.3 | 27.06.2013 | அத்தாட்சி |
| அ.சா.ஆ.2 /அ.சா.3 | 27.06.2013 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 /அ.சா.3 | 27.06.2013 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.4 /அ.சா.3 | 27.06.2013 | பார்வை மகசர் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.5 /அ.சா.3 | 27.06.2013 | சொத்துக்கள் கைப்பற்றிய அத்தாட்சி |
| அ.சா.ஆ.6 /அ.சா.3 | 27.06.2013 | படிவம் – 91 |

**<u>அரசுத்தரப்பு சான்று பொருட்கள் : –</u>**

| | |
|---|---|
| அ.சா.பொ.1 | குட்டி புலி சிடி – 9 |
| அ.சா.பொ.2 | தீயாக வேலை செய்யனும் குமாரு –11 |
| அ.சா.பொ.3 | கேடி பில்லா – 2 |
| அ.சா.பொ.4 | தில்லுமுல்லு – 16 |
| அ.சா.பொ.5 | நாகராஜன் சோலை – 1 |
| அ.சா.பொ.6 | சூதுகவ்வும் –3 |
| அ.சா.பொ.7 | மாகாணி –3 |
| அ.சா.பொ.8 | எதிர்நீச்சல் – 7 |
| அ.சா.பொ.9 | கரிமேடு – 6 |
| அ.சா.பொ.10 | மற்ற சிடிக்கள் 65 |
| அ.சா.பொ.11 | ஆபாச சிடிகள் 11 ஆக மொத்தம் 134 |

***குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில், சாட்சி, ஆவணம் : இல்லை.***

T NARENDRAKUMAR

Digitally signed by T NARENDRAKUMAR
Date: 2026.08.11 17:31:17 +0530

நீதித்துறை நடுவர்,

விரைவு நீதிமன்றம், இரணியல்.

Judicial Magistrate, Fast Track Court,
Eraniel.

Court Seal.

" The parties shall apply, as soon as possible, for the return of all exhibits which they may wish to preserve, as the record will be liable to be destroyed after three years from this date"

CNR.No. TNKK- 1400-0549-2019

**The Hon'ble High Court of Madras in Roc.No. 121910-A/2024/F1, Dated:06.05.2025**

## Cover Sheet Annexed to Judgment / Order

| | | | |
|---|---|---|---|
| 1. | Name of the Court | : | Judicial Magistrate, Fast Track Court, Eraniel. |
| 2. | Case Number | : | C.C.No.232/2019 |
| 3. | Date of Judgment of Conviction / Dismissal / Reversal of Acquittal / Dismissal of Bail Application | : | 11.08.2026<br>Acquittal |
| 4. | Name of Person Convicted / Acquittal Reversed / Bail Denied / Bail Cancelled | : | Denniskanth, S/o. Rajendiran |
| 5. | Contact Address of Legal Aid Committee of Court Complex in which the above Court is situated. | | The Hon'ble Chairman,<br>Taluk Legal Services Committee,<br>Court Campus, Eraniel. |
| 5a. | Designation of the person to be contacted | | The Hon'ble Chairman,<br>Taluk Legal Services Committee,<br>Eraniel. |
| 6. | Phone No. of above Legal Aid Committee (between am to pm) | | 04651-220227<br>(10.00 am to 05.45 pm) |
| 7. | Alternative Mobile No. of Legal Aid Committee | | Tmt.S.Shareen Banu<br>Junior Administrative Assistant<br>9952716394 |

T NARENDRAKUMAR

Digitally signed by T NARENDRAKUMAR
Date: 2026.08.11 17:31:24 +0530

Judicial Magistrate,
Fast Track Court, Eraniel.